# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:7 Issue :28 October 2025

கோட்டை:7 வாயில்:28 அக்டோபர் 2025

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India
selvakumar.v@tamiluniversity.ac.in

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India. dayanidhi@unom.ac.in

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University) Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And Literery Studies University of Delhi,Delhi . dumadevi@mil.du.ac.in

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA. eswaran@msu.edu

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,Eastern University Srilanka

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of
Aesthetic Stidies ,Eastern University, Srilanka

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet,
Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.sekar@iasetamilnadu.ac.in

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்

+917299587879

www.aranejournal.com

aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# அகத்தினுள்

ஐங்குறுநூறு 'சிறுவெண் காக்கைப் பத்து' பாடல்களில் எடுத்துரைப்புச் சிறப்புகள் மற்றும் நுட்பங்கள்
முனைவர் நா.ஜானகிராமன்1, முனைவர் பெ.தனலட்சுமி2

குறுந்தொகையை தழுவிய இக்கால படைப்புகளில் இலக்கியநயம்
மெ.பேபி நிஷாந்தினி

பட்டினப்பாலையில் பழந்தமிழரின் கடற்பயணத்தில் மரக்கலங்கள்
ப.ராம்குமார்

புறநானூற்றில் உயிரியல் செய்திகள்
எம்ஜிராமச்சந்திரன். வெ

புறநானூற்றில் தமிழர் பண்பாடு
திருமதி கா.சுகன்யா,

செவ்வியல் இலக்கியங்களில் இல்லறத்தில் தாயின் பங்களிப்பு
இரா.சினேகலதா

திருக்குறளில் உழவும் உண்மைநிலையும்
முனைவர் இரா.ஜெய்சங்கர்

திருக்குறளில் மருத்துவச் செய்திகள்
முனைவர் சல்மா மஹஜபீன் த. மு

திருக்குற்றாலக் குறவஞ்சியில் குறத்தியின் குறிசொல்லும் பான்மை
க.நித்தியா

அபிராமி அந்தாதி - ஒரு பார்வை
சா.கஸ்தூரி

வேட்டுவர்களின் பண்பாட்டு சார்ந்த மரபுகள் — சிலப்பதிகாரம்
முனைவர் த. சுபஜா

வைணவ உரைச் சக்ரவர்த்தி பெரியவாச்சான் பிள்ளை
முனைவர்ப.தனஞ்செயன்

தெய்வங்களும் கோவில்களும்
அ.அறிவுக்கொடி

பெரும்பண்ணையூர், சிமிழி, புதுக்குடி கிராம மக்களின் சிறுதெய்வ வழிபாட்டில் மக்கட்பேறு சடங்குப் பின்புலம்
க.கார்த்திகா

அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


பாம்பாட்டிச் சித்தர் பாடல்களில் சமுதாயச் சிந்தனைகள்
முனைவர். க.விமலா

திருக்குர்ஆன் கூறும் மாந்தர் ஒழுக்கங்கள்
அ.ஷமீலா பேகம்

ஜோ டி குரூஸின் யாத்திரை புதினத்தில் சிறுவனின் தேடல்கள்: கத்தோலிக்கம் மற்றும் பூர்வீக நம்பிக்கைகளின் புரிதல்கள்
முனைவர் தா. இரா.ஹெப்சிபா பியூலா சுகந்தி

கூகை புதினத்தில் கையாளப்பட்டுள்ள உத்தி முறைகள்
இரா.ராஜேஷ் குமார்

எஸ்.இராமகிருஷ்ணனின் மூன்று அற்புதங்கள் சிறுகதையில் தெக்கனின் பாத்திரப்படைப்பு
ஜெ.சர்மிளா

தோட்டியின் மகன் நாவலில் மக்களின் உணர்வுகளும் போராட்டங்களும் முனைவர் வ.மீனாட்சி

கூளமாதாரி புதினத்தில் தலித்தியம்
வீ. சவிதா

வெளவால் தேசத்தில் இயற்கை சூழல்
மு.ஹரிதேவி

சோ. தர்மனின் சூல் நாவலில் பழமொழிகள்
மு.கோமதி

சோ. தர்மனின் 'சூல்' நாவலில் உவமைகள்
இ.ராபர்ட் கென்னடி

மலையகத்தமிழரும் அகதி வாழ்வும்
வேளாங்கன்னி.ஏ

அண்மைய நாவல்களில் மீனவர்களின் பண்பாட்டியல்
முனைவர் ந. இரத்தினக்குமார்

கே.பி கறுப்பனின் பெண்ணியச் சிந்தைனகள்
தனிஜா த. பெ



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்


**பொதிகைமலையின் ஆயண்டிரன்**
**முனைவர் த. முத்துலட்சுமி**

**பாண்டிய நாட்டுத் துறைமுகங்கள்**
**கி.தமிழரசி**

**பழந்தமிழர்களின் வாழ்வியலில் மலர்ப் பயன்பாடு ஒரு பார்வை**
**முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்**

**வாய்மொழிப் பாடல்களில் பஞ்சகாலக் குறிப்புகள்**
**ம.கலைச்செல்வன்**

**இலக்கியங்களும் பசிப்பிணியும்**
**முனைவர் ப. மணிகண்டன்**

**அறிவியல் நுட்பங்களும் இலக்கிய செழுமையும்**
**முனைவர் அ.புஷ்பா**

**கணினித்தமிழ் வளர்ச்சியில் இணைய நூலகங்கள்**
**கு.நிவேதா**

**மொழி வளர்ச்சியில் ஊடகத்தின் பங்கு**
**முனைவர் ஈ இசக்கியம்மாள்**

*1.The Predicament of Women in Patriarchal Society in Anita Nair's The Better Man*
**K. Nesapriya**

**திரைப்படக் கதைசொல்லலும் சமூகத் தாக்கமும்: அசுரன் திரைப்படம்.**
**(திரைப்படக் கோட்பாடுகள், தொழில்நுட்ப அழகியல் மற்றும் பார்வையாளர் வரவேற்பு)**
**திரு. விசுமாப்போடி சசிகரன்**

**பாலக்காடு மாவட்டத்தில் சுமை தாங்கி**
**முனைவர் வே.இரவி**

**கீழடி அகழாய்வு - தமிழரின் தொன்மையான வரலாற்று பின்புலம்**
**முனைவர் அ. மதலேன்**

**சம்புவராயர் கல்வெட்டுகளில் அறியலாகும் நாடும் ஊரும்**
**முனைவர்அ. அமுல்ராஜ்**

**பரதநாட்டியத்தில் நால்வகை விருத்தியின் வகிபங்கு**
**கலாநிதி தாக்ஷாயினி பரமதேவன்**



**அட்டைப்படம் உதவி**
**இணையம்**

**நன்றி**



# தமிழ்

# *VAUVAL DESATHIL IRKAI CHOOLAL*

***M.Haridevi,*** *22710/B1/2019, Phd Scholar, Tamil Department, Government Arts College, Udumalpet-642126*

***Dr.S.Gunasekaran,*** *Associate Professor, Tamil Department, Government Arts College, Udumalpet: 642126*

***Abstract;***

*Life is simple and happy for those who live in harmony with nature. On the contrary, those who deviate from nature are exposed to many life crises. This can be seen from Sangam literature to modern literature. Man has gradually shifted from a state of relationship with nature to one of hostility towards it. Against this backdrop, the aim of this study is to examine the natural environment occurring in the Karisal region through the novel "Bat Nation" written by writer So. Tharman.*

***Keywords:*** *Nature, Agriculture, Kanmai, Rain, Ecology*

# வௌவால் தேசத்தில் இயற்கை சூழல்

**மு.ஹரிதேவி ,** *22710/B1/2019,முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை - 642126,*

**முனைவர் சு.குணசேகரன்,** *இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை, அரசு கலைக் கல்லூரி, உடுமலைப்பேட்டை - 642126*

**ஆய்வுச்சுருக்கம்**

இயற்கையோடு இயைந்து வாழ்க்கையை நடத்துபவர்களுக்கு வாழ்க்கை எளிமையாகவும், மகிழ்ச்சியாகவும் அமைகிறது. மாறாக, இயற்கையிடமிருந்து வேறுபடுபவர்கள் பல வாழ்வியல் நெருக்கடிகளுக்கு ஆளாகின்றனர். இதனைச் சங்க இலக்கியங்கள் முதல் நவீன இலக்கியங்கள் வரை காணலாம். மனிதன், இயற்கையோடு கொண்டிருந்த உறவுநிலையிலிருந்து மெல்ல மெல்ல மாறித் தற்போது இயற்கையுடன் பகைமை நிலையைக் கடைபிடிக்கிறான். இந்தப் பின்னணியில் கரிசல் வட்டாரத்தில் நிகழும் இயற்கைச் சூழலைப் பற்றி எழுத்தாளர் சோ.தர்மன் எழுதிய “வௌவால் தேசம்” எனும் புதினம் வழி ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாக அமைகிறது.

**திறவுச்சொற்கள்:** இயற்கை, வேளாண்மை, கண்மாய், மழை, சூழலியல்.

**முன்னுரை**

ஒரு நாட்டின் வரலாற்றினை ஒரு வரலாற்று அறிஞன் மட்டும் எழுதுவதால் முழுமை பெற்றுவிடுவதில்லை. ஆனால் இலக்கியப் படைப்பாளன் ஒரு நாட்டின் சமகால நிகழ்வுகளை தன்னுடைய படைப்பின் வழி பதிவு செய்யும் பொழுது அவனுடையப் பொறுப்பு மேலும் அதிகமாகிறது என்பதில் மிகை ஒன்றும் இல்லை. படைப்பாளி அன்றாட வாழ்வில் சந்தித்த எத்தனையோ நிகழ்ச்சிகள் மனத்தை பாதித்த அனுபவங்கள் பிறரின் அனுபவங்கள் எல்லாம் ஒருங்கிணைந்த ஒரு படைப்பாக வௌவால் தேசம் நாவல் வடிவம் பெற்றுள்ளது.

கரிசல் வட்டார மக்களின் பாரம்பரிய வேளாண்முறைகள் பருவகால விதைகள், இயற்கைப் பற்றிய மனித புரிதல்கள், மரம் செடி கொடிகளின் வனப்புகள் போன்றவற்றை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

**இயற்கை பற்றிய கருத்தாக்கம்**

கதைக்களன்களில் மிக முக்கியமானது இயற்கை சூழல் ஆகும். அத்தகைய முறையின சோ.தர்மன் பல்வேறு பகுப்புகளாக விளக்குகிறார். அதிகபட்சமாக கிராமிய இயற்கை சார்ந்த சூழல்முறைகளை தன் படைப்பின் வாயிலாக புலப்படுத்துவதைக் காண முடிகிறது.

இயற்கை எனும் சொல் இயல்பாக நிகழக்கூடிய செயல்களைக் குறிப்பது. **”இது இயல் + கை எனப் பிரிந்து புணரும் என்பர்”**[1] (நக்கீரன், தமிழ் ஒரு சூழலியல் மொழி, ப.31). அதாவது மனித இடையீடு இல்லாமல் தானாகத் தோன்றும் பொருள்கள் அனைத்தையும் இயற்கை எனும் வரையறைக்குள் அடக்கலாம். தாவரங்கள், விலங்குகள் முதலியன இவ்வரையறைக்குள் இடம்பெறும்.

தொல்காப்பியர் குறிப்பிடும் நிலமும் இயற்கையின்பாற்பட்டதே. உலகத் தோற்றம் பற்றிக் கூறிய இவர்,

> **”நிலம் தீ நீர் வளி விசும்கொடு ஐந்தும்**
> **கலந்த மயக்கம்”**[2] (தொல்காப்பியர், தொல்காப்பியம் - மரபியல், ப.90)

என ஐம்பூதங்களின் சேர்க்கையினால் உருவானதே உலகம் என்று குறிப்பிடுகிறார். இதில் குறிக்கப்படும் ஐம்பூதம் என்னும் சொல், தொகைச் சொல்லாய் ஐம்பூதங்களைக் குறித்து நின்றாலும் சிறப்பாக இயற்கையையே குறித்து நிற்கிறது.

**கரிசல் வட்டார இயற்கை வளங்கள்**

மனிதவாழ்க்கைக்கு அடிப்படை ஆதாரமாகத் திகழ்பவை தாவரங்களும் விலங்குகளும் ஆகும். இவற்றினூடாக மனித சமூகத்திற்கு நேரடியான தொடர்பு இருப்பினும் அவை மௌனத்தாலும் மர்மத்தாலும் கட்டமைக்கப்பட்ட ஒன்றாக இருக்கின்றது. மேலும் மனித வாழ்வானது பஞ்ச பூதங்களின் பௌதிகக் கூறுகளை எதிர்கொள்ளக் கூடியது. மற்ற உயிருள்ள, உயிரற்ற கூறுகளோடும் பின்னிப் பிணைந்துள்ளது. இத்தகைய மானுட சமூகத்திற்குப் பயன்படும் வளங்கள் ஒவ்வொரு பகுதியிலும் வேறுபட்டத் தன்மை கொண்டதாகக் காணப்படுகின்றன.

கரிசல் நிலத்தில் ஏராளமான மரம், செடி, கொடிகள் இருந்தன. நாட்டுக் கருவேல், மஞ்சணத்தி, வேம்பு, உடை முதலிய மரவகைகள் இப்பகுதியின் முதன்மையான கருப்பொருளாகும். கரிசல் வட்டார நீர்நிலைகளில் மக்கள் இளைப்பாறிக் கொள்வதற்கேற்ப விழுதுகள் தொங்கும் ஆலமரங்கள், கள் கலயங்கள், தொங்கும் பனை மரங்கள், புளிய மரங்கள் ஆகியன நிழல் பரப்பின. ஓடைக் கரையையும் கண்மாய்க் கரையையும் திருகுக் கள்ளிச் செடிகளும் சப்பாத்திக் கள்ளிச் செடிகளும் அலங்கரித்தன. இதனை, **"வேப்ப மரங்களும், நாட்டுக் கருவேல மரங்களும், இடையைப் போல் வட்டவடிவமாகப் படர்ந்து நிற்கும் உடை மரங்களை வீரர்கள் ஆச்சரியமாகப் பார்த்தார்கள். நீர் நிறைந்த கண்மாய்க் கரைகளில் விழுதுகள் தொங்க படர்ந்திருந்த ஆல மரங்களின் அடியில் அமர்ந்து இளைப் பற்றிக் கொண்டார்கள். மஞ்சணத்தி மரங்களையும் அடுக்கடுக்காய் வளர்ந்து நிற்கும் திருகு கள்ளிச் செடிகளையும், செக்கச் சிவந்த பழங்களுடன் உள்ளங்கை விரிப்பாய் உயர்ந்து நிற்கும் சப்பாத்திக் கள்ளிகளையும் பார்த்தார்கள். சின்ன உருண்டை உருண்டையாய் சிவப்புக் கலரில் தெரியும் பழங்களைப் பறிக்க கைவிட்டபோது கொக்கிகளைப் போல் உள்ள இலந்தை முட்களில் கைகளைக் கிழித்துக் கொண்டார்கள்"**[3] (தர்மன்.சோ., வௌவால் தேசம், பக்.45-46) என்று சோ.தர்மன் குறிப்பிடுகிறார். இவை தவிர இலந்தை மரம், சங்கஞ்செடி, ஆதளைச்செடி, கொக்கிரவாணிச் செடி, சம்புக் கதிர்கள், கோரை, ஆவாரஞ் செடிகள் முதலியனவும் செழித்து வளர்ந்தன. இவற்றைத் தாங்கி நிற்கும் கரிசல் மண்ணானது மிகுந்த வளத்துடன் இருந்தது. பருவம் தவறாமல் மழை பெய்ததால் பசுமை மாறாமல் காணப்பட்டது.

**இயற்கை பற்றிய மனிதப் புரிதல்கள்**

மரம், செடி, கொடி, பறவை, விலங்கு முதலிய இயற்கைக் காரணிகள் அனைத்தும் மனித வாழ்வியலோடு கலந்தவை. இவையன்றி மனித சமூகம் முழுமை பெறாது. இவை மனிதனுக்குச் சூழலியல் சார்ந்த அறிவையும் முக்கியத்துவத்தையும் உணர்த்துபவை.

கரிசல் வட்டாரத்தில் காரிக்குருவி, கரிச்சான் குருவி, கௌதாரி, மயில், சேவல் முதலிய பறவையினங்கள் விடியலை அறிவிப்பவையாக இருந்துள்ளன. இவற்றின் சத்தம் விடியல் பொழுதைக் கணக்கிட உதவியாய் அமைந்தன என்பதனை, **"வெளியில் கரிச்சான் குருவியின் கீச்சிச் சத்தங்கள் கேட்டன. விடிகாலை என்பதை உணர்ந்து கொண்டவன் காலையில் காணும் கனவுகள் பலிக்கும் என்று தாத்தா சொல்வதை நினைத்துப் பார்த்தான். கரிச்சான் குருவிகளுக்குப் பின் கௌதாரிகளும் அதன் பின்னால் மயில்களும் கடைசியாகச் சேவல்களும் கிராமங்களை அன்றாடம் துயில் எழுப்பும்"**[4] (தர்மன்.சோ., வௌவால் தேசம், ப.268) என்று வௌவால் தேசம் புதினம் வழி அறிய முடிகின்றது.

**இயற்கைத் தடுப்பரண்கள்**

கண்மாய், ஏரி போன்ற நீர்நிலைகளில் இயற்கையாகவே சில தடுப்பரண்கள் இருந்தன. நீர்நிலைகளின் கரை உடையாமல் பாதுகாப்பதில் இவற்றின் பங்கு முக்கியமானதாகும். ஒரு வயோதிகர் கண்மாயில் உள்ள இயற்கை அரண்களைப் பற்றி வேல்ஸ் துரைக்கு எடுத்துரைக்கும் காட்சியினை, **"துரைகளே... இந்தப் புதர் என்னென்னு தெரியுமா? இவைகளை நாங்கதான் வளர்த்தோம். இந்தச் செடிக்குப்பேரு சங்கன் செடினு பேரு. இதுகளோட வேர்தான்இந்தக் கண்மாய்க் கரையை உடைய விடாமக் காக்குது. அதோட சல்லிவேர் மண் அரிப்பைத் தடுத்து இப்பிடி அரண் போல நிக்கும். இந்தச் செடிகள யாரும் சேதப்படுத்தினா ஊர்ல அபராதம் போடுவோம்"**[5] (தர்மன்.சோ., வௌவால் தேசம், ப.218) என்று வௌவால் தேசம் குறிப்பிடுகின்றது. இத்தகைய பாதுகாப்பையும், இயற்கை அரண்களையும் தாண்டிக் கண்மாயில் உடைப்பு ஏற்படும்போது அது ஆட்சியாளர்களிடம் தெரிவிக்கப்படும். உடைந்த கண்மாயை ஆய்வு செய்து, சேதத்திற்கேற்ப இழப்பீடும் வழங்கப்படும்.

**பாரம்பரிய வேளாண்முறைகள்**

வேளாண்மை இந்தியாவின் மிகப் பழமையான தொழிலாகும். வேளாண்மை என்னும் சொல்லில் உள்ள "வேள்" என்னும் பதமானது. மண், உதவி ஆகிய பொருள்களைத் தருவதாக ந.கதிரைவேற்பிள்ளையின் தமிழ் - தமிழ் அகரமுதலி குறிப்பிடுகின்றது. வேளாண் தொழில் செய்பவரின் முக்கியப் பணி உழுதலாகும். இதனைத் தொல்காப்பியம்,

> **"வேளாண் மாந்தர்க் குழுதூ னல்லது**
> **இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி"**[6] (இளம்பூரணர் (உ.ஆ).,
> தொல்காப்பியம் பொருளதிகாரம் - மரபியல் நூற்பா.625)

என்று குறிப்பிடுகின்றது. அதுமட்டுமின்றி **"வேளாண்மை என்ற சொல்லிற்குக் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி பண்படுத்தித் தானியங்களை விளைவிக்கும் பொருள்"[7]** (இராஜசீலி.தே, (சிறப்பிதழாசிரியர்), இலக்கியங்களில் இயற்கை, உங்கள் நூலகம் இதழ், ப.488) என்று பொருள் தருகிறது.

கரிசல் பகுதி வேளாண்மை, வயல், தோட்டம், காடு ஆகிய மூன்று நிலப் பகுப்புகளில் நடைபெற்றது. இப்பகுதிக்கேற்ப பாசன முறைகளும் விளைச்சலும் இருந்தன. இவற்றுள் வயல்கள், ஆறு மற்றும் கண்மாய்களிலிருந்து பாசனம் பெறுபவை. தோட்டங்கள் கிணற்று நீர்ப் பாசனத்தைக் கொண்டவை. காடுகள் மழையை எதிர்பார்த்து இருப்பவை என்பதனை, **"வயலுன்னா தண்ணி ஆத்துலிருந்து வரும். இல்லனா கண்மாயிலிருந்து வரும். தோட்டம்னா தண்ணி கெணத்துலிருந்து வரும். காடுனா தண்ணி மழை பேஞ்சு வரும்"[8]** (தர்மன்.சோ., வௌவால் தேசம், ப.52) என்று வௌவால் தேசம் புதினம் குறிப்பிடுகின்றது.

இயற்கையும் மக்களுக்கு ஒத்துழைப்பு தந்தது. இதன் காரணமாக அறுவடை முடிந்த காலத்தில் மக்கள் இயற்கையை வழிபட ஆரம்பித்தனர். **"ஆடி, ஆவணி விதைத்தல், புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை அடைமழை, மார்கழி, தை விளைச்சல், அறுவடை, அதிலிருந்து நான்கு மாசங்கள் மாசி, பங்குனி, சித்திரை, வைகாசி எங்கள் கோயில் திருவிழாக்கள். விளைச்சல் வீட்டுக்கு வந்ததுக்கும் நல்ல விளைச்சல் தந்தமைக்கும் எங்கள் சாமிகளுக்கு கொடை, வழிபாடு பலியிடல் பூசை, ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம்"[9]** (தர்மன்.சோ., வௌவால் தேசம், ப.157) நிகழ்த்தப்பட்டன.

**பருவமறிந்து பயிர் செய்தல்**

மக்கள் பருவமறிந்து தொழில் செய்தனர். கோடைக்காலங்களில் உழுதல், எருவிடுதல், விதைத் தயாரித்தல் முதலிய வேலைகளை மேற்கொண்டனர். மார்கழி, தை மாதங்களில் அறுவடை செய்துள்ளனர். ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் அடைமழை காலம் என்பதால் பொழுதுபோக்கிற்காக மீன்பிடித்தல், வேட்டையாடுதல் முதலிய வேலைகளில் ஈடுபட்டனர். இதனால் உற்பத்தி பெருகியதோடு அவர்களின் வருவாயும் அதிகரித்தது. **"ஆடி கடேசியல மழை வந்திரும். ஆடியில விதைப்பு ஆரம்பிச்சா, அவணியில் முடிச்சிருவோம். சரியா காட்டு வேலைகள் எல்லாத்தையும் முடிச்சு, உஸ்னு உட்கார்ந்தா, கண்மாய் நெறபெருக்கு பெருகி மறுக்கல் பாயும். அப்புறமென்ன வயக்காட்டு வேலையை ஆரம்பிச்சிருவோம். ஐப்பசி, கார்த்திகை அடைமழைக்காலம். எல்லா வேலைகளையும் முடிச்சாச்சா இந்த ரெண்டு மாசமும் சும்மாதான் இருப்போம். தூண்டில் போட்டு மீன் பிடிப்போம். இல்லனா காட்ல முயல் வேட்டைக்குப் போவோம். மார்கழிமுழுவதும் பனிக்காலம். பழைய படியும் வேலைக**

**ஆரம்பிச்சுரும். தை பிறந்திட்டா அறுவடைக் காலம், வெள்ளாமை எல்லாமே வீட்டுக்கு வந்திரும். நெல் விளைஞ்சு அறுப்பு வேலை நடக்கும். எங்க வீடுகள்ள குலுக்கைகள் நெறஞ்சிடும். மூட்டைமூட்டையா தானியங்கள் குமிஞ்சிரும் தொரைகளே. அப்புறம் மாசி, பங்குனி, சித்திரையில் பழையபடியும் உழவுதான்”**[10] *(தர்மன்.சோ., வௌவால் தேசம், பக்.222-225) கரிசல் வட்டாரத்தில் ஐப்பசி மாதம் மிகக் கொடுமையானதாக இருந்துள்ளதைக் காண முடிகிறது.*

**தொகுப்புரை**

- *படைப்பாளர்கள் பலரும் இயற்கையைத் தங்களது படைப்புகளில் பாடுபொருளாகக் கொண்டனர். இதில் ஏற்படும் மாறுபாடுகள் பற்றிக் காலந்தோறும் பதிவு செய்தனர். இவர்களுள் சோ.தர்மனும் ஒருவராவர்.*
- *இயற்கைக்கும் மனிதனுக்குமான பிணைப்புகள் அதிகமாகின. இதனால் இவர்களின் முதன்மைத் தொழிலான வேளாண்மையும் தழைத்தோங்கியது.*
- *கரிசல் பகுதியில் தற்சார்புடைய பாரம்பரிய வேளாண் முறைகள் கடைபிடிக்கப்பட்டன. வேளாண்மையில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பக் கருவிகள், விதைகள் இடுபொருட்கள் அனைத்தையும் அப்பகுதி மக்களே தயார் செய்தனர் என்பதைக் காணமுடிகிறது.*
- *காலவோட்டத்திற்கேற்ப இயற்கையாக ஏற்பட்ட வறட்சியும் அரசமைப்பு மாற்றமும் கரிசல் வட்டாரத்தை வானம் பார்த்த பூமியாக மாற்றியுள்ளது.*

**ஆய்விற்குப் பயன்பட்ட நூல்கள்**


*1. இளம்பூரணர் (உ.ஆ)., - தொல்காப்பியம் பொருளதிகாரம், கழக வெளியீடு தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி, பதிப்பு ஆண்டு - 1969.*

*2. தர்மன், சோ., - வௌவால் தேசம், அடையாளம் பதிப்பகம், 1205/1, திருச்சி - 621310. முதற்பதிப்பு - 2017.*

*3. நக்கீரர், - தமிழ் ஒரு சூழலியல் மொழி, காடோடி பதிப்பகம், 6, வி.கே.என்.நகர், நன்னிலம், திருவாரூர் - 610105. முதற்பதிப்பு - 2022.*

*Aivirku Payanpatta Noolkal*

1. *Ilampuranar (Woo, Aa).,* - *Tholkappiyam Porulathikaram, Kalaga Veliyidu, Thennindiya Saiva Sithantha Noorpathippu Kalakam limited, Tirunelveli, Pathippu Aandu - 1969.*

2. *Dharman, S.,* - *Voval Desam, Adaiyalam Pathippakam, 1205/1, Trichy - 621310. Mutharpathippu - 2017.*

3. *Nakkeerar,* - *Tamil oru Sulaliyal Mozhi, Kadodi Pathipakam, 6, V.K.N. Nagar, Nannelam, Thiruvarur - 610105. Mutharpathippu - 2022.*

**இதழ்கள்**

1. உங்கள் நூலகம், - சிறப்பிதழ், இலக்கியங்களில் இயற்கை, சென்னை, ஜனவரி - 2023.

***Ithalkal***

1. *Ungal Nulakam,* - *Sirapithalkal, Ilakkiyangalil Iyarkai, Chennai, January - 2023.*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2026, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - ஜனவரி 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜூலை இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com